## <u>நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்</u>

<u>**முன்னிலை**</u> :- திரு.அப்துல் ரகுமான், B.Com., L.L.B.,
நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்

2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ம் நாள் திங்கட் கிழமை,

திருவள்ளுவராண்டு, 2054, சுபகிருது வருடம், பங்குனி திங்கள்
12 ம் நாள் திங்கட் கிழமை)

<u>**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.2054/2023**</u>

<u>**CNR NO.:TNCB0A-046673-2023**</u>

<u>**அரசுக்காக:-**</u>

காவல் ஆய்வாளர்,

அனைத்து மகளிர் காவல் நிலையம்,

மேற்கு, கோயமுத்தூர்.

(காவல் நிலைய குற்ற எண்.27/2022). … புகார்தாரர்

/எதிர்/

குலாம்தஸ்தகீர் (38/2022),

த/பெ.ஜாயிக் அன்வர் முகமது,

எண்.600 தியாகிகுமரன் வீதி,

பூமார்கட்,

ஆர்.எஸ்.புரம்,

கோயமுத்தூர். … எதிரி

| குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106-ன் படியான விவரப்பட்டியல் | | |
|---|---|---|
| 1 | வரிசை எண் | C.C.No.2054 of 2023 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | மேற்கு அனைத்து மகளிர் காவல் நிலையம், கோவை.<br>குற்ற எண்.27 of 2022 |
| 3 | எதிரியின் பெயர் | குலாம்தஸ்தகீர், |
| 4 | தந்தையாரின் பெயர் | த/பெ.ஜாயிக் அன்வர் முகமது, |
| 5 | தொழில் | |

| | | |
|---|---|---|
| 6 | குடியிருப்பு | எண்.600 தியாகிகுமரன் வீதி,<br>பூமார்கட், ஆர்.எஸ்.புரம்,<br>கோயமுத்துார்.<br>* எதிரியின் வயது : 38/2022<br>* எதிரியின் தொழில் : - |
| 7 | வயது | |
| 8 | சம்பவம் நடந்த தேதி | 12.07.2022 |
| 9 | முறையீடு செய்யப்பட்ட தேதி | 12.07.2022 |
| 10 | கைது செய்யப்பட்ட தேதி | 12.07.2022 |
| 11 | பிணையில் விடுவித்தல் | 28.07.2022 |
| 12 | ஒப்படைத்தல் /அனுப்பிவைத்தல்-ன் தேதி | இல்லை |
| 13 | விசாரணை துவங்கப்பட்ட தேதி | 02.02.2024 |
| 14 | விசாரணை முடிவடைந்த தேதி | 15.03.2024 |
| 15 | தண்டனை அல்லது உத்தரவு | இ.த.ச. பிரிவு 498(A), 495ன் படி குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்-படுகின்றது. |
| 16 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு / முடிவு | எதிரிகளுக்கு தீர்ப்புரையின் நகல் வழங்கப்படவில்லை. |
| 17 | காலதாமதத்தின் விளக்கம் | - |

**As per Rule 106 CRP 2019**

**Case Summary in CC 2054/2023**

| Sl.No. | Description | Remarks |
|---|---|---|
| 1. | The period of Remand of the Accused/Surrender | 12.07.2022 - 28.07.2022 |
| 2. | Date of filing of the Complaint/Final Report in the Court | 17.08.2023 |
| 3. | The date of Commital of the case to the court of session | Not applicable |
| 4. | First Questioning U/S.240 Cr.P.C | 21.03.2024 |
| 5. | Filing of Miscellaneous petition and result 320 Cr.P.C | C.M.P. No:4104/2024 |

<table>
<tr><td>6.</td><td>Date of Examination in chief and Cross examination of witness.<br>PW1 Chief and Cross<br>PW2 Chief and Cross</td><td><table><tr><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>PW1</td><td>02.02.2024</td><td>-</td></tr><tr><td>PW2</td><td>15.03.2024</td><td>-</td></tr></table></td></tr>
<tr><td>7.</td><td>NBW Issued date</td><td>16.02.2024</td></tr>
<tr><td>8.</td><td>NBW recalled</td><td>26.02.2024</td></tr>
<tr><td>9.</td><td>Questioning U/s.313(i)(b) of Cr.P.C</td><td>21.03.2024</td></tr>
<tr><td>10.</td><td>Datails of Abscondence of an accused and his appearance/producion</td><td>Nil</td></tr>
<tr><td>11.</td><td>Grant of stay by superior courts and the result there of</td><td>Nil</td></tr>
</table>

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 24.08.2023 ம் தேதி அன்று இந்நீதிமன்றக் வழக்குக்கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இறுதியாக 25.08.2023 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-II அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.P.ராஜராஜன், பி.காம்., பி.எல்., மற்றும் திருமதி.N.சத்தியபாமா, எம்.ஏ., பி.எல்., அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்த பின்பு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

**இவ்வழக்கானது மேற்கு அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் குவிமுச பிரிவு 173(2) ன் கீழ் 17.08.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் இ.த.ச. பிரிவுகள் 498(A),495 ன் கீழான குற்றச்சாட்டுகளுக்காக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்காகும்.**

2. <u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

இவ்வழக்கின் எதிரிக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ள நிலையில் நிகழ்நிலை புகார்தாரரும் அவரது முதல் கணவரும் கருத்து வேறுபாட்டால் பிரிந்து வாழ்ந்து வந்துள்ளார்கள். இந்த நிலையில் சம்பவத்திற்கு 1 ஆண்டுக்கு முன்பு அறிமுகமான வழக்கின் எதிரி தனக்கு திருமணமான விபரத்தை மறைத்து நிகழ்நிலை புகார்தாரருடன்

பழகியுள்ளார். பின்னர் நிகழ்நிலை புகார்தாரரும் எதிரியும் ஒருவரை ஒருவர் காதலித்து வந்துள்ளார்கள். இந்த நிலையில் எதிரி குலாம் தஸ்தகீர் நிகழ்நிலை புகார்தாரருடைய தந்தையிடம் சென்று தனக்கு இன்னும் திருமணமாகவில்லை என்று கூறி நிகழ்நிலை புகார்தாரரை பெண் கேட்டுள்ளார். நிகழ்நிலை புகார்தாரரின் தந்தை பிறகு பார்க்கலாம் என்று கூறியுள்ளார். அவர் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளமாட்டார் என்று நினைத்து எதிரி நிகழ்நிலை புகார்தாரரை அழைத்துக்கொண்டு பெங்களூரில் உள்ள எதிரியின் தங்கை வீட்டிற்கு சென்று தங்கையிடம் முதல் மனைவியுடன் விவாகரத்து செய்து கொண்டதாகவும் தற்போது நிகழ்நிலை புகார்தாரரை காதலிப்பதாகவும் அதற்கு நிகழ்நிலை புகார்தாரரின் பெற்றோர் ஒப்புக்கொள்ளாததால் நிகழ்நிலை புகார்தாரரை அழைத்துக்கொண்டு வந்துவிட்டதாக கூறி நிகழ்நிலை புகார்தாரரின் தங்கையின் உதவியுடன் 07.02.2022 ம் தேதி சென்னைக்கு சென்று R.A.ARITAH, நவ்பரில் ரோடு மெட்ராஸ்-14 என்ற பள்ளிவாசலில் வைத்து நிகழ்நிலை புகார்தாரரை எதிரி திருமணம் செய்துள்ளார். நிகழ்நிலை புகார்தாரர் தனது வீட்டிலிருந்து எடுத்துச்சென்ற 10 பவுன் நகை, செல்போன், பள்ளிச்சான்றிதழ், Smart Watch ஆகியவற்றை எதிரி நிகழ்நிலை புகார்தாரரிடமிருந்து பெற்றுக்கொண்டு முதல் திருமணத்தை மறைத்துள்ளார். இது குறித்து நிகழ்நிலை புகார்தாரர் எதிரியிடம் கேட்ட போது எதிரி நிகழ்நிலை புகார்தாரருடன் தகராறு செய்து நிகழ்நிலை புகார்தாரருக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 498(A), 495 ன் கீழ் குற்ற எண்.27/2022 எண்ணில் 12.07.2022 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 498(A), 495 ன் கீழ் மேற்கு அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173(2)ன் கீழ் இறுதி அறிக்கை 17.08.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் பிணை பெற்றுள்ளார்.

**3.** இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.2054/2023 என கு.வி.மு.ச. பிரிவு 190(1)(ஆ)ன் கீழ் 24.08.2023 ம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்-பட்டது. எதிரி முன்னிலையானவுடன் இந்த வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.207 பிரிவின் படி 13.09.2023 ம் தேதி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**4.** எதிரிக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரி மீது குற்றச்சாட்டு வனைய

போதிய முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால், 15.09.2023ம் தேதியன்று எதிரியிடம் இ.த.ச. பிரிவுகள் 498(A), 495 இ.த.ச வின் கீழ் கேள்வி கேட்கப்பட்டும், இ.த.ச. பிரிவுகள் 498(A), 495 இ.த.ச வின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி வினவிய போதும், எதிரி குற்றவாளி இல்லை என்றும், குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையான சாட்சிகள் விசாரிக்கப்-பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :**

கடந்த 2022ம் ஆண்டு தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி பெங்களூருக்கு அழைத்துச்சென்று திருமணம் செய்து கொண்டதாகவும், அதன் பின்னர் 1 மாதம் கழித்து அவர் ஏற்கனவே திருமணம் ஆனவர் என்றும் அவருக்கு இரண்டு குழந்தைகள் இருப்பது தெரிய வந்ததாகவும், அதன் பின்னர் தான் தன் பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், தான் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும், தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், இந்த வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும் **அ.சா.1** சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 ஆன காவல் ஆய்வாளர் திருமதி.கலைவாணி புலன் விசாரணை அதிகாரி வழக்கினைப் புலன் விசாரணை செய்து, பட்டியல் சாட்சிகள் ரபிதா, கௌசர், சமீனா, மணிகண்டன், ஸ்ரீகுமார், சமீம், சரிமளா மற்றும் மனோன்மணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னிட்டு புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவு **498(A), 495** ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில், எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் படி 21.03.2024ம் தேதி வினவிய போது, எதிரி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பொய் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

8. **தீர்வுக்குரிய பிரச்சனை:**

**எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 498(A), 495ன் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.**

**தீர்வு**

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது அரசு தரப்பு ஆவணங்கள் சாட்சிகள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்டதாகவும் எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டுமாயும் அரசு தரப்பு வாதத்தினை முன் வைத்துள்ளார். மாறாக எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது புகார்வாதி மற்றும் எதிரிக்கு இடையே சமாதானம் ஏற்பட்டு விட்டதாகவும், முதல் மனைவியை விவாகரத்து செய்யாமல் தன்னை இரண்டாவது திருமணம் செய்து கொண்டதால் புகார் கொடுத்து விட்டதாகவும், இந்த வழக்கிலிருந்து எதிரி விடுதலை செய்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் எதிரி குற்றமற்றவர் என்றும், எதிரி விடுதலை செய்யவேண்டுமென்றும் வாதத்தினை முன் வைத்துள்ளார்.

10. கடந்த 2022ம் ஆண்டுக்கு முன்பு வழக்கின் எதிரி தனக்கு திருமணமான விபரத்தை மறைத்து நிகழ்நிலை புகார்தாரருடன் பழகியுள்ளார். இந்த நிலையில் எதிரி குலாம் தஸ்தகீர் நிகழ்நிலை புகார்தாரருடைய தந்தையிடம் சென்று தனக்கு இன்னும் திருமணமாகவில்லை என்று கூறி நிகழ்நிலை புகார்தாரரை பெண் கேட்டபோது நிகழ்நிலை புகார்தாரரின் தந்தை பிறகு பார்க்கலாம் என்று கூறியதால் அவர் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளமாட்டார் என்று நினைத்து எதிரி நிகழ்நிலை புகார்தாரரை அழைத்துக்கொண்டு நிகழ்நிலை புகார்தாரரின் தங்கையின் உதவியுடன் 07.02.2022ம் தேதி சென்னையிலுள்ள R.A.ARITAH, நவ்பரில் ரோடு மெட்ராஸ்-14 என்ற பள்ளிவாசலில் வைத்து நிகழ்நிலை புகார்தாரரை எதிரி திருமணம் செய்துகொண்டதாகவும், மேலும் எதிரி முதல் திருமணம் செய்ததை நிகழ்நிலை புகார்தாரர் அறிந்து கேட்ட போது எதிரி நிகழ்நிலை புகார்தாரருடன் கடுமையாக தகராறு செய்து நிகழ்நிலை புகார்தாரருக்கு கடுமையான மனஉளைச்சலை ஏற்படுத்தி குற்றம் புரிந்ததாக வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான ரபிதாகௌசர் என்பவர் மேற்கு அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல்

நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் மேற்கு அனைத்து மகளிர் காவல்நிலையம், காவல்நிலைய ஆய்வாளர் அவர்களால் எதிரி மீது காவல் நிலைய குற்ற எண்.27/2022 என்ற எண்ணில் இ.த.ச பிரிவுகள் 498(**A**), 495 ன் கீழான குற்றத்திற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டு இ.த.ச பிரிவுகள் 498(**A**), 495 ன் கீழான பிரிவுகளின் கீழான குற்றத்திற்காக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் இந்த வழக்கு கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

11. அரசுத்தரப்பு வழக்கினை நிரூபிக்கும் பொருட்டு அரசுத் தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அதுபோல அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. கடந்த 2022 ம் ஆண்டுக்கு முன்பு வழக்கின் எதிரி தனக்கு திருமணமான விபரத்தை மறைத்து நிகழ்நிலை புகார்தாரருடன் பழகியுள்ளார். இந்த நிலையில் எதிரி குலாம் தஸ்தகீர் நிகழ்நிலை புகார்தாரருடைய தந்தையிடம் சென்று தனக்கு இன்னும் திருமணமாகவில்லை என்று கூறி நிகழ்நிலை புகார்தாரரை பெண் கேட்டபோது நிகழ்நிலை புகார்தாரரின் தந்தை பிறகு பார்க்கலாம் என்று கூறியதால் அவர் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளமாட்டார் என்று நினைத்து எதிரி நிகழ்நிலை புகார்தாரரை அழைத்துக்கொண்டு நிகழ்நிலை புகார்தாரரின் தங்கையின் உதவியுடன் 07.02.2022 ம் தேதி சென்னையிலுள்ள R.A.ARITAH, நவ்பரில் ரோடு மெட்ராஸ்-14 என்ற பள்ளிவாசலில் வைத்து நிகழ்நிலை புகார்தாரரை எதிரி திருமணம் செய்துகொண்டதாகவும், மேலும் எதிரி முதல் திருமணம் செய்ததை நிகழ்நிலை புகார்தாரர் அறிந்து கேட்ட போது எதிரி நிகழ்நிலை புகார்தாரருடன் கடுமையாக தகராறு செய்து நிகழ்நிலை புகார்தாரருக்கு கடுமையான மனஉளைச்சலை ஏற்படுத்தியதாக தன்னுடைய புகாரில் கூறியுள்ளார்.

13. எனவே அரசுத்தரப்பு வழக்கின் படி நிகழ்நிலை புகார்தாரர் தான் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அவர் தனது முதல் விசாரணையின் போது கடந்த 2022 ம் ஆண்டு தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி பெங்களூருக்கு அழைத்துச்சென்று

திருமணம் செய்து கொண்டதாகவும், எதிரி ஏற்கனவே திருமணம் ஆனதை தெரிந்து நிகழ்நிலை புகார்தாரர் கேட்ட போது ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக புகார் கொடுத்தாகவும், தற்போது எதிரியுடன் சமாதானமாகச் சென்றுவிட்டதாகவும், இந்த வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், இந்த வழக்கிலிருந்து எதிரியை விடுதலை செய்வதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14. வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி.கலைவாணி என்பவர் அரசு தரப்பில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் சாட்சியத்தின் போது சம்பவம் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது பற்றியும் புலன் விசாரணை செய்து சாட்சிகளை விசாரித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது பற்றி சாட்சியமளித்துள்ளார்.

15. இவ்வழக்கில் அ.சா.1 ம் 1 ம் எதிரியும் கணவன் மனைவி ஆவார்கள். இந்நிலையில் வழக்கின் சம்பவத்தின்போது பாதிக்கப்பட்ட நபராக எடுத்துரைக்கப்பட்டு அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளான அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தின் போது முதல் திருமணத்தை மறைத்து தன்னை இரண்டாவது திருமணம் செய்து கொண்டதன் காரணமாக புகார் கொடுத்தாகவும், தற்போது தானும் எதிரியும் சமாதானமாகச் சென்றுவிட்டதாகவும், இந்த வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், எதிரியை விடுதலை செய்வதில் ஆட்சேபனை இல்லை என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், புகார் தான் தான் கொடுத்தது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் சாட்சியம் அ.சா.1 கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 புகாரில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கும் அரசு தரப்பு வழக்கிற்கும் முற்றிலும் முரணாகவும் மாறுபட்டும் உள்ளது.

16. இவ்வழக்கானது அ.சா.1 கொடுத்துள்ள புகாரின் பேரில் தான் புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 தனது சாட்சியத்தின் போது 1 ம் எதியும் அ.சா.1 ம் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், இந்த வழக்கிலிருந்து எதிரியை விடுதலை செய்வதில் தனக்கு ஆட்சேபனை இல்லை எனவும் சாட்சியம் அளித்துள்ளதை பார்க்கும்போது எதிரி மீது சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டினை பொறுத்து சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் அரசு தரப்பு வழக்கினை வலுவிழக்கச் செய்வதாக உள்ளது.

இவ்வழக்கின் முக்கிய சாட்சியான அ.சா.1 டன் 1 ம் எதிரி தகராறு செய்ததாகவோ, கடுமையான மனஉளைச்சலை ஏற்படுத்தியதாகவோ எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

17. அ.சா.2 சாட்சியானவர் வழக்கு சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது பற்றியும் புலன் விசாரணை செய்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே பரிசீலனை செய்யப்பட வேண்டியது மிக முக்கிய பிரச்சினையாகும்.

18. வழக்கின் விசாரணையின் போது எதிரிக்கும் நிகழ்நிலை புகார்தாரருக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டுவிட்டதாக சொல்லப்பட்டு கு.வி.மு.ச. பிரிவு 320(2)ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது CMP No.4104/2023 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எதிரியின் மீது கூறப்பட்டுள்ள குற்றச்-சாட்டுகளில் இ.த.ச பிரிவுகள் **498(A), 495** ன் கீழான சட்டப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளக்கூடிய குற்றச்சாட்டுகள் அல்ல என்பதால் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமரச மனு 02.02.2024 தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

19. அ.சா.1 தான் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அ.சா.1 தான் எதிரி மீது புகார்மனு கொடுத்துள்ளார். அப்படியிருக்க அ.சா.1 யே தங்களுடைய சாட்சியத்தின் போது எதிரியும் அ.சா.1 ம் சமாதானம் செய்து கொண்டதாகவும், முதல் திருமணத்தை மறைத்து அ.சா.1 ஐ இரண்டாவது திருமணம் செய்து கொண்டதால் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக புகார் கொடுத்துள்ளதாகவும், வழக்கிலிருந்து எதிரி விடுதலை செய்வதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், வழக்கின் விசாரணையின் போது எதிரிக்கும் வழக்கின் நிகழ்நிலை புகார்தாரருக்கும் இடையே சமரசம் ஏற்பட்டுவிட்டதாக கூறப்பட்டுள்ள நிலையிலும் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அ.சா.3 ன் சாட்சியம் மட்டுமே போதுமானதாக இல்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. எனவே அ.சா.2 விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி குற்றவாளி என கருத முடியாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. அரசுத்தரப்பில்

முன் வைக்கப்பட்ட சாட்சியங்கள் எதிரியை குற்றச்சாட்டுடன் சந்தேகத்திற்கு இடமின்றி இணைக்கும் வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

21. அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை விடுதலை செய்வதே நீதியின் பால் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இறுதியாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே அரசுத்தரப்பு வழக்கில் ஏற்பட்ட சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக வழங்கி அவரை குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சட்டப்பிரிவுகள் **498(A), 495** இ.த.ச வின் படி அரசு தப்பில் நிரூபணமாகவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

22. முடிவில், எதிரி மீது சட்டப்பிரிவுகள் **498(A), 495** இ.த.ச வின் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமாகாததால் அவரை குற்றவாளி இல்லை என்று கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி தீர்மானித்து, அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

23. வழக்கில் வழக்குச் சொத்தான கருப்பு கலர் வாருடன் கூடிய சதுர வடிவிலான கடிகார வடிவம் கொண்ட Smart watch நீதிமன்றத்தில் பி.ஆர் எண்.29/2022 என்ற எண்ணில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்குச்சொத்தானது ஒரு பயனற்ற பொருள் என்பதாலும் மேற்படி சொத்தினை யாரும் உரிமை கோரவில்லை என்பதாலும் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு வழக்குச்சொத்தை அழிக்க கு.வி.மு.ச பிரிவு 452ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரி இந்நீதிமன்றத்திற்கு எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்தாகி விடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்து தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25ம் நாள் திங்கட் கிழமை அன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/-ஏ.அப்துல்ரஹ்மான்,
நீதித்துறை நடுவர் (பொறுப்பு),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

**அட்டவணை :**

**அரசு தரப்பு சாட்சிகள்** :

| சாட்சி எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | முதல் விசாரணை செய்த தேதி | குறுக்கு விசாரணை செய்த தேதி |
|---|---|---|---|
| அ.சா.1 | சபிதா கௌசர் | 02.02.2024 | - |
| அ.சா.2 | திருமதி.எஸ்.கலைவாணி (காவல் ஆய்வாளர்) | 15.03.2024 | - |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :

அ.சா.ஆ.1 - புகார்

அ.சா.ஆ.2 - முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.3 - ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.4 - படிவம் 91

**அரசு தரப்பு சான்று பொருள்** : இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள்** : இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**பின்குறிப்பு :**

1. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவு அறிக்கை காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. எதிரி விடுதலை செய்யப்பட்டார்.
5. வழக்குச்சொத்து பற்றிய உத்தரவு சொத்து பதிவேட்டில் பதியப்பட்டது.

ஒம்/-ஏ.அப்துல்ரஹ்மான்,
நீதித்துறை நடுவர் (பொறுப்பு),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர் (பொறுப்பு),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.